**<u>கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்</u>**

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் தேதி திங்கட்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.134/2022</u>**

<u>(CNR No.TNPB02-003456-2022)</u>

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
அனைத்து மகளிர் காவல் நிலையம்,
பெரம்பலூர்,
குற்ற எண்.21/2020. ... குற்ற முறையீட்டாளர்

/எதிர்/

A1. ஆனந்தசெல்வம், வயது 34/2020
த/பெ.அங்கமுத்து,
மணியாங்குறிச்சி ரோடு,
பாடாலூர் கிராமம்,
ஆலத்தூர் தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

A2. இந்திராணி, வயது 47/2020
த/பெ.அங்கமுத்து,
மணியாங்குறிச்சி ரோடு,
பாடாலூர் கிராமம்,
ஆலத்தூர் தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

A3. சாரதா, வயது 39/2020
க/பெ.முருகேசன்,
பாடாலூர் கிராமம்,
ஆலத்தூர் தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம். ... எதிரிகள்

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/ RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

| வ. எண் | பொருள் | விவரம் | |
|---|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர் / எதிரிகள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம் | (எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படவில்லை) | |
| | | காவலில் | விடுவிக்கப்பட்ட விவரம் |



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:25:48 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைக்கப்பட்ட தேதி | & தேதி | |
| | | A1, A2, A3– | 16.12.2020(AB) | |
| 2. | நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | 06.06.2022 | | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி | இல்லை | | |
| 4. | குவிமுச பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் / எதிரிகளிடம் விசாரிக்கப்பட்ட தேதி | 240 Crpc on நாள் :15.05.2025 | | |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களின் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம் (இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட) | 1.M.P.No. 17 of 2026 Dt : 18.03.2026 U/s. 311 of Cr.P.C petition–Allowed.<br>2.Crl.M.P.No. 396 of 2026 Dt : 18.03.2026 U/s. 320(1) of Cr.P.C petition–Dismissed. | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1<br>அ.சா.2 | 18.03.2026<br>18.03.2026 | இல்லை<br>18.03.2026 |
| 7 | எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b)–இன் கீழ் வினா வினவப்பட்ட தேதி | 23.03.2026 | | |
| 8. | எதிரிகள் தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்ட/ தோன்றிய விபரம் | தலைமறைவு ஏதும் இல்லை. | | |
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை | | |

இவ்வழக்கானது 15.06.2022 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள்வரை விசாரணையில் இருந்து வந்து 23.03.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றவியல் பொது வழக்கறிஞர் திரு. சண்முகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.சிராஜுதீன் அவர்கள்

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:25:54 +0530

முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**தீர்ப்புரை**

**அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:**

1. எதிரி ஆனந்தசெல்வத்திற்கும் வாதி புனிதாவிற்கும் 2018 ம் ஆண்டு திருமணம் நடைப்பெற்றுள்ளது என்றும் 1 வது எதிரி வெளிநாட்டிற்கு செல்லும் போது வாதியை 1 வது எதிரியின் தாயாரான 2 ஆம் எதிரியின் பாதுகாப்பில் விட்டு சென்றுள்ளார் என்றும் பாடாலூர் 1 வது எதிரியின் வீட்டில் இருக்கும் போது வாதியை 2 வது மற்றும் 3 வது எதிரிகள் சேர்ந்து அருவருக்கதக்க வார்த்தைகளால் திட்டி கையால் அடித்துள்ளனார் என்றும் வெளிநாட்டில் இருந்து திரும்பிய 1 ஆம் எதிரி வாதியை அழைத்துவந்து தனியாக பெரம்பலூரில் குடித்தனம் நடத்தியுள்ளார் என்றும் அப்போதும் 1 ஆம் எதிரி வாதியை மதுபோதையில் கொடுமை செய்துள்ளார் என்றும் அதன் பின்னர் 15.06.2020 ஆம் தேதி முதல் மீண்டும் வாதியும் 1 வது எதிரியும் 2 வது எதிரியின் வீட்டில் குடும்பம் நடத்தி வந்துள்ளனர் என்றும் அப்போது 1 ஆம் எதிரிக்கும் 3 ஆம் எதிரிக்கும் கள்ள தொடர்பு இருந்துள்ளது தெரியவந்து அதனை வாதி கண்டித்துள்ளார் என்றும் 02.11.2020 –ம் தேதி இரவு 10.43 மணிக்கு 1, 3 எதிரிகள் வீட்டில் இருப்பதை அறிந்து அங்கு சென்று வாதி 1 ஆம் எதிரியை அழைத்துள்ளார் என்றும் ஆனால் அங்கிருந்த 1 ஆம் எதிரி வாதியை அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியுள்ளார் என்றும் தகவல் தெரிந்து 03.11.2020 –ம் தேதி காலை 11.00 மணியளவில் அங்கு நியாயம் கேட்க வந்த சாட்சிகள்–2 மற்றும் 3 ஆகியோரை 1, 2, 3 எதிரிகள் அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியும் சாட்சி–2 ன் கைவிரல்களை 1 ஆம் எதிரி கையால் பிடித்து இறுக்கி அடித்தும் மற்ற 2, 3 எதிரிகள் சாட்சி–3 ன் தலைமுடியை பிடித்து இழுத்து தள்ளி கைகளால் அடித்தும் இரண்டு மாத காப்பிணியான வாதியை 1 ஆம் எதிரி வயிற்றிலேயே காலால் மாறி மாறி உதைத்தும் வாதிக்கும் சாட்சிகள் 2 மற்றும் 3 ஆகியோருக்கும் மனம் மற்றும் உடல் ரீதியாக கொடுமைப்படுத்தியுள்ளனர் என்றும் அருகில் இருந்தவர்கள் சத்தம்போடவே எதிரிகள் மூவரும் வாதியை பார்த்து இத்தோட ஓடிப்போ இனிமேல் வீட்டிற்கு வந்தால் உன்னை கொலை செய்துவிடுவோம் என்றும் கொலையிரட்டல் விடுத்துள்ளனர் என்றும் எனவே எதிரிகளின் செய்கையானது இ.த.ச. 294(b), 323, 498(A), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழும்

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:25:58 +0530

தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207 இன் கீழ் நகல் வழங்குதல்**

2. இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, இந்நீமன்றத்தில் முன்னிலையான 1, 2, 3 எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 இன்படி அரசுத் தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கப்பட்டது.

**குற்றச்சாட்டுக்கள் வனைந்து குற்றம் பற்றி வினவுதல்**

3) 1, 2, 3 எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, 1 ஆம் எதிரி மீது இ.த.ச. 294(b)(3 எண்ணிக்கைகள்), 323, 498(A), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழும் 2, 3 எதிரிகளின் மீது இ.த.ச. 294(b)(3 எண்ணிக்கைகள்), 323, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்கள் குறித்து, வினவியபோது 1, 2, 3 எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்**

4. அரசுத் தரப்பில் அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :-**

5. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 புனிதா தனது நீதிமன்ற சாட்சியத்தில் 1 ஆம் எதிரிக்கும் தனக்கும் சிறு சிறு குடும்ப பிரச்சனைகள் ஏற்பட்டு அதன் விளைவாக போலிசாரிடம் புகார் ஒன்று கொடுத்தேன் என்றும் எந்த மாதம், எந்த தேதி எந்த நேரத்தில் எதிரிகளில் யார் தன்னை என்ன வாசகம் சொல்லி திட்டி கொடுமைப்படுத்தினார்கள் என்றோ யார் யார் தன்னை எதனால் அடித்தார்கள் என்று தன்னால் குறிப்பாக சொல்ல இயலவில்லை என்றும் அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தனக்கு நினைவில்லை என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் கூறி அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

6.அ.சா.2 சுசிலா(தலைமை காவலர்) தனது சாட்சியத்தில் கடந்த 28.11.2020ம் தேதி அன்று பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக சித்ரா என்பவர் பணியிலிருந்தார் என்றும் அவர் தற்போது பணிமாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்தில் பணி செய்து வருவதாலும் தரப்பினர் தங்களுக்குள் சமாதானம்



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:26:04 +0530

ஆகிவிட்டதாலும் இவ்வழக்கை விரைந்து முடிக்க வேண்டி மேற்படி நபருக்காக கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கடந்த 28.11.2020ம் தேதி அன்று உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று அதனை பரிசீலனை செய்து அதன் தன்மைக்கேற்ப பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 21/2020 இதச பிரிவுகள் 294(b), 323, 498(A), 506(1) ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும் பின்னர் உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கணேசன், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் அவை முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ 4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது என்றும் பின்னர் சாட்சிகள் புனிதா. முத்துலெட்சுமி, செல்லம். அமுதா, கணேசன், வெங்கடேசன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் மாண்புமிகு பெரம்பலூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 498(A), 506(1)ன் படி கடந்த 20.02.2021ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

**<u>குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் வினவுதல்</u>**

7. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து 1, 2, 3 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.தொ. பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் 1, 2, 3 எதிரிகளிடம் விளக்கிக் கூறி வினவியபோது 1, 2, 3 எதிரிகள் அவற்றை மறுத்துரைத்துள்ளனர். மேலும் எதிரிகள் தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>அரசுத் தரப்பு வாதம்</u>**

8. அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் 1, 2, 3 எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாட்சியங்களின் அடிப்படையில் 1, 2, 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:26:09 +0530

**எதிரிகள் தரப்பு வாதம்**

9. இதனை மறுத்து எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 1, 2, 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரரான அ.சா.1 பிறழ் சாட்சி ஆகிவிட்டார் என்றும், 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் யாரும் அளிக்கவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை 1, 2, 3 எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

10. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**தீர்வு**

11. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. எதிரி ஆனந்தசெல்வத்திற்கும் வாதி புனிதாவிற்கும் 2018 ம் ஆண்டு திருமணம் நடைப்பெற்றுள்ளது என்றும் 1வது எதிரி வெளிநாட்டிற்கு செல்லும் போது வாதியை 1 வது எதிரியின் தாயாரான 2 ஆம் எதிரியின் பாதுகாப்பில் விட்டு சென்றுள்ளார் என்றும் பாடாலூர் 1வது எதிரியின் வீட்டில் இருக்கும் போது வாதியை 2 வது மற்றும் 3வது எதிரிகள் சேர்ந்து அருவருக்கதக்க வார்த்தைகளால் திட்டி கையால் அடித்துள்ளனார் என்றும் வெளிநாட்டில் இருந்து திரும்பிய 1 ஆம் எதிரி வாதியை அழைத்துவந்து தனியாக பெரம்பலூரில் குடித்தனம் நடத்தியுள்ளார் என்றும் அப்போதும் 1 ஆம் எதிரி வாதியை மதுபோதையில் கொடுமை செய்துள்ளார் என்றும் அதன் பின்னர் 15.06.2020 ஆம் தேதி முதல் மீண்டும் வாதியும் 1வது எதிரியும் 2வது எதிரியின் வீட்டில் குடும்பம் நடத்தி வந்துள்ளனர் என்றும் அப்போது 1 ஆம் எதிரிக்கும் 3 ஆம் எதிரிக்கும் கள்ள தொடர்பு இருந்துள்ளது தெரியவந்து அதனை வாதி கண்டித்துள்ளார் என்றும் 02.11.2020 –ம் தேதி இரவு 10.43 மணிக்கு 1, 3 எதிரிகள் வீட்டில் இருப்பதை அறிந்து அங்கு சென்று வாதி 1 ஆம் எதிரியை அழைத்துள்ளார் என்றும் ஆனால் அங்கிருந்த 1 ஆம் எதிரி வாதியை அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியுள்ளார் என்றும் தகவல் தெரிந்து 03.11.2020 –ம் தேதி காலை 11.00 மணியளவில் அங்கு நியாயம் கேட்க வந்த சாட்சிகள்–2 மற்றும் 3 ஆகியோரை 1, 2, 3 எதிரிகள் அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியும் சாட்சி–2 ன் கைவிரல்களை 1 ஆம் எதிரி


RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:26:15 +0530

கையால் பிடித்து இறுக்கி அடித்தும் மற்ற 2, 3 எதிரிகள் சாட்சி–3 ன் தலைமுடியை பிடித்து இழுத்து தள்ளி கைகளால் அடித்தும் இரண்டு மாத காப்பிணியான வாதியை 1 ஆம் எதிரி வயிற்றிலேயே காலால் மாறி மாறி உதைத்தும் வாதிக்கும் சாட்சிகள் 2 மற்றும் 3 ஆகியோருக்கும் மனம் மற்றும் உடல் ரீதியாக கொடுமைப்படுத்தியுள்ளனர் என்றும் அருகில் இருந்தவர்கள் சத்தம்போடவே எதிரிகள் மூவரும் வாதியை பார்த்து இத்தோட ஓடிப்போ இனிமேல் வீட்டிற்கு வந்தால் உன்னை கொலை செய்துவிடுவோம் என்றும் கொலையிரட்டல் விடுத்துள்ளனர் என்றும் அரசுத் தரப்பு வழக்கு அமைந்துள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் 1, 2, 3 எதிரிகள் செய்யவில்லை என்றும், அரசுத் தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் பின்வருமாரு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

12. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2. 3 எதிரிகள் மீது பொது இடத்தில் வைத்து புகார்தாரரான அ.சா.1 யும், 2, 3 சாட்சிகளையும் ஆபாசமாகத் திட்டியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 294(பி)–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னையும், சாட்சிகளையும் எதிரிகள் பொது இடத்தில் மற்றவர்களுக்கு தொந்தரவு தரும் வகையில் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 294(பி)(3 எண்ணிக்கைகள்)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டம் 323 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

13. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3 எதிரிகள் சாட்சிகளை குற்றமுறு எண்ணத்துடன் அடித்து சொற்பக்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக 1, 2, 3 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும்

சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் சாட்சிகளை எதிரிகள் தாக்கி சொற்பக்காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே 1, 2, 3 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டம் 498(A) பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

14. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 ஆம் எதிரி புகார்தாரரை வயிற்றிலேயே காலால் மாறி மாறி உதைத்து கொடுமைப்படுத்தியதாக 1 ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 498(A)–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 498(A)–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் 1 ஆம் எதிரி தன்னை கொடுமைப்படுத்தியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே 1 ஆம் எதிரி மீதான இ.த.ச பிரிவு 498(A)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 506(1) பிரிவின் கீழான குற்றச்சாட்டுகள் குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

15. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் 1, 2, 3 எதிரிகள் புகார்தாரரை குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக 1, 2, 3 எதிரிகள் மீது இ.த.ச.506(1) பிரிவின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் தன்னை குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் 1, 2, 3 எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. முடிவில், 1 ஆம் எதிரி மீதான இ.த.ச. 294(b)(3 எண்ணிக்கைகள்), 323, 498(A), 506(1) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும், 2, 3 எதிரிகளின்

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:26:24 +0530

மீதான இ.த.ச. 294(b)(3 எண்ணிக்கைகள்), 323, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும் அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் 1, 2, 3 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், 1, 2, 3 எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கு வழக்குச் சொத்து எதுவும் இல்லை என்பதால் அதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 23.03.2026 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:26:30 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**I. அரசுத் தரப்பு சாட்சிகள் :–**

1. அ.சா.1 – புனிதா
2. அ.சா.2 – சுசிலா(தலைமைக்காவலர்)

**II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :–**

1. அ.சா.ஆ.1 – புகாரில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்
2. அ.சா.ஆ.2 – புகார்
3. அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை
4. அ.சா.ஆ.4 – பார்வைமகஜர்
5. அ.சா.ஆ.5 – மாதிரிவரைபடம்

**III. அரசுத் தரப்பு சான்று பொருள் :–**

இல்லை.

**IV.எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :–** இல்லை

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:26:35 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

குறிப்பு

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

RESHMA

Judicial Magistrate,
Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:26:40 +0530

As per Rule 106 of Criminal Rules of Practice

| S. No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | AWPS, Perambalur, Cr.No.21/2020, U/S. 294(b), 323, 498(A), 506(1) IPC | Name | A1 - Anandhaselvam | Occurrence | 02.11.2020 | - |
| | | Father's Name | Angamuthu | Complaint | 28.11.2020 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | Maniyankurchi road, Padalur village, Alathur Taluk, Perambalur District. | Release on bail | 16.12.2020 (AB) | |
| | | Age | 34/2020 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 18.03.2026 | |
| | | | | Closure of Trial | 18.03.2026 | |
| | | | | Sentence or Order | 23.03.2026 | |
| 2. | AWPS, Perambalur, Cr.No.21/2020, U/S. 294(b), 323, 498(A), 506(1) IPC | Name | A2 - Indirani | Occurrence | 02.11.2020 | |
| | | Husband's Name | Angamuthu | Complaint | 28.11.2020 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | Maniyankurchi road, Padalur village, Alathur Taluk, Perambalur District. | Release on bail | 16.12.2020 (AB) | |
| | | Age | 47/2020 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 18.03.2026 | |
| | | | | Closure of Trial | 18.03.2026 | |
| | | | | Sentence or Order | 23.03.2026 | |
| 3. | AWPS, Perambalur, Cr.No.21/2020, U/S. 294(b), 323, 498(A), 506(1) IPC | Name | A3 - Saratha | Occurrence | 02.11.2020 | |
| | | Husband's Name | Murugesan | Complaint | 28.11.2020 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | Padalur village, Alathur Taluk, Perambalur District. | Release on bail | 16.12.2020 (AB) | |
| | | Age | 39/2020 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 18.03.2026 | |
| | | | | Closure of Trial | 18.03.2026 | |
| | | | | Sentence or Order | 23.03.2026 | |

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:26:50 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

Judicial Form No.61 (See Rule 106)
IN THE COURT OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

JUDGMENT IN CALENDAR CASE NO. 134 OF 2022

ON THE FILE OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | |
|---|---|
| Complainant | Punitha |
| Accused | A1.Ananthaselvam, S/o.Angamuthu<br>A2.Indirani W/o.Angamuthu<br>A3.Saratha W/o.Murugesan |
| Offence | U/S.294(b), 323, 498(A), 506(1) IPC |
| Findings | Acquitted |
| Sentence | -- |

| **Serial Number** | **Description of the Accused** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's/ Husband's Name** | **Caste or race** | **Occupation** | **Residence** | **Age** |
| 1. | Ananthaselvam | Angamuthu | Male | Labourar | Padalur | 34/2020 |
| 2. | Indirani | Angamuthu | Female | Labourar | Padalur | 47/2020 |
| 3. | Saratha | Murugesan | Female | Labourar | Padalur | 39/2020 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Occurance** | **Complaint** | **Apprehension or Appearance** | **Release on bail** | **Commencement of trail** | **Closure of trial** | **Sentence or Order** | **Explanation of Delay** |
| 02.11.2020 | 28.11.2020 | 16.12.2020 | 16.12.2020 (AB) | 18.03.2026 | 18.03.2026 | 23.03.2026 | - |
| 02.11.2020 | 28.11.2020 | 16.12.2020 | 16.12.2020 (AB) | 18.03.2026 | 18.03.2026 | 23.03.2026 | - |
| 02.11.2020 | 28.11.2020 | 16.12.2020 | 16.12.2020 (AB) | 18.03.2026 | 18.03.2026 | 23.03.2026 | - |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.23 17:26:55 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.